# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

### NEWS PAPER CLIPPINGS

DINAKARAN DATED 03.05.2025

## புதுவை பல்கலைக்கழகம் சார்பில் தேசிய கருத்தரங்கு



புதுவை பல்கலைக்கழகம் சார்பில் சென்னை லயோலா கல்லூரி மற்றும் தொலைதூர கல்வி இயக்ககத்தில் தேசிய கருத்தரங்கு நடந்தது.

புதுச்சேரி, மே 3: புதுவை பல்கலைக்கழகம் சார்பில் சென்னை லயோலா கல்லூரி மற்றும் தொலைதூர கல்வி இயக்ககத்தில் தேசிய கருத்தரங்கு நடத்தப்பட்டது. முதல் நாள் கருத்தரங்கில், கருத்தரங்கின் முக்கிய தலைப்புகள் குறித்து அறிவிக்கப்பட்டது. இரண்டாம் நாள் கருத்தரங்கு புதுவை பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்ககத்தின் இயக்குனர் முனைவர் அரவிந்த் குப்தாவின் தலைமையில் துவங்கியது. சென்னை லயோலா கல்லூரியின் அருட் தந்தை சகாயராஜ் வாழ்த்துரை வழங்கினார். பஞ்சாப் பல்கலைக்கழகத்தின் திறந்த நிலை மற்றும் தொலைதூர கல்வி மையத்தின் இயக்குனர் முனைவர் ஹர்ஷ் கந்தார் தலைமையுரை ஆற்றினார். துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு கருத்தரங்கின் நோக்கம் குறித்து விவரித்தார். பிறகு மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வு அறிஞர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் 50க்கும் மேற்பட்டோர் ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பித்தனர். இக்கருத்தரங்கின் தலைமை அறிக்கையாளர் மற்றும் சட்ட மேற்படிப்பு துறையின் தலைவருமான முனைவர் குருமீந்தர் கவுர் கருத்தரங்க அறிக்கையை சமர்ப்பித்தார். கருத்தரங்கின் நிறைவு விழாவில் பேராசிரியர் கிளமெண்ட் சகாயராஜா லூர்து மற்றும் முனைவர் ஸ்ரீனிவாசன் உரையாற்றினர். பல்கலைக்கழகத்தின் இணைப்பதிவாளர் முனைவர் சரவணன் நன்றி கூறினார்.

MALAI MALAR DATED 03.05.2025



சென்னை லயோலா கல்லூரியில்

# புதுவை பல்கலைக்கழக கருத்தரங்கு

புதுச்சேரி, மே.3—

புதுவை பல்கலைக்கழகம் சார்பில் சென்னைலயோலா கல்லூரி தொலை தூர கல்வி இயக்ககத்தில் தேசிய கருத்தரங்கு நடத்தப்பட்டது.

புதுவை பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்கக இயக்குனர் அரவிந்த்குப்தா தலைமை வகித்தார். லயோலா கல்லூரி சகாய ராஜ் வாழ்த்தி பேசினார். பஞ்சாப் பல்கலைக்கழக இயக்குனர் ஹர்ஷ்கந்தார் சிறப்புரையாற்றினார். புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு நோக்க உரையாற்றினார். மாணவர்கள், ஆசிரியர்கள், அறிஞர்கள் 50—க்கும் மேற்பட்ட ஆய்வு கட்டுரைகள் சமர்பித்தனர். குர்மீந்தர் கவுர் கருத்தரங்க அறிக்கை சமர்பித்தார். நிறைவு விழாவில் பேராசிரியர்கள் கிளமெண்ட் சகாய ராஜா, சீனிவாசன் ஆகியோர் உரையாற்றினர். இணை பதிவாளர் சரவணன் நன்றி கூறினார்.